**<u>அசல் வழக்கு எண். 35/2021</u>**

22.07.2025

**பெயர் – ஆனந்தி** (PW1)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

13.03.2025 ம் தேதி குறுக்கு விசாரணை பாரா 1 மற்றும் 2 பதிவு செய்யப்பட்டது. இன்று பாரா 3 முதல் பதிவு செய்யப்படுகிறது.

(3) எனது வீட்டிற்கு வடபுறமாக 3ம் நபர்களின் வீடு உள்ளது என்றால் சரியல்ல இறந்து போன ஜெகநாதனின் வீடு தான் உள்ளது. பிரதிவாதி வீட்டை தாண்டி தான் என் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் சரியல்ல அவர்கள் வீடு சந்திற்கு அந்தப்புறம் உள்ளது. எனது வீட்டிற்கு செல்வதற்கு வேறு வழி உள்ளதா என்றால் இல்லை. தட பிரச்சனை காரணமாக பிரதிவாதி உடுமலைப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 346/2011 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு என்ன ஆனது என்று தெரியாது. வழக்கு விவரம் தெரியும். அந்த வழக்கு விவரம் தெரிந்த பின்பு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா சந்து கொமரலிங்கம் பேரூராட்சிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல எங்கள் வீட்டிற்கு கட்டுப்பட்ட இடம். எங்கள் கிரையப் பத்திரத்தில் சந்து எங்களுக்கு சொந்தமானது என்று எழுதப்பட்டுள்ளது.

(4) பிரதிவாதிகள் மீது கொமரலிங்கம் காவல் நிலையம் மற்றும் பேரூராட்சி அலுவலகத்தில் புகார் செய்தேன் என்றால் சரிதான். தாவா சந்து பேரூராட்சிக்கு சொந்தமானது என்பதால் தான் பேரூராட்சி அலுவலகத்தில் புகார் செய்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவாச் சொத்தை பார்வையிட்டார். அவர் தாக்கல் செய்த அறிக்கையை பற்றி தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் ஆக்கிரமிப்பு இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி வீட்டிற்கு வடபுறம் மற்றும் கிழபுறம் உள்ள சந்தை தான் என் வீட்டின் பக்கம் காட்டியுள்ளார்கள். பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை அவருக்குண்டான இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஆதரவாக

உறுத்துக்கட்டளை உத்திரவு உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. அதை மறைத்து இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்